# பௌத்த, இந்து மக்களின் பிறப்புடன் தொடர்பான கிரியைகளுக்கிடையிலான பண்பாட்டு இடைவினைகள்: அம்பாறை மாவட்டத்தை மையப்படுத்தியது

**Subaraj N.[138] & Vethanathan M.[139]**

**ஆய்வுச் சுருக்கம்**

இலங்கையில் இந்து, பௌத்த மத மக்கள் தமக்கிடையே பண்பாட்டில் மிக நெருங்கிய தொடர்புடையவர்களாக உள்ளனர். இங்கு இந்துக்களும் பௌத்தர்களும் பண்பாட்டில் இடைவினை களுக்குட்படுகின்றனர். அவை உடன்பாடானதாகவும் எதிர்மறையானதாகவும் அமைகின்றன. அம்பாறை மாவட்டம் மூவின மக்களும் செறிந்து வாழுமிடமாகும். பௌத்தர்களோடு இந்துக்கள் இணைந்து வாழும் பல பிரதேசங்கள் இங்குள்ளன. இங்கு இவ்விரு மதத்தவர்க்கிடையே பண்பாட்டுக் கலப்பு அதிகமாக இடம் பெற்றுள்ளன. இறை வழிபாடுகள், வாழ்க்கை நெறிமுறைகள், வாழ்வியற் சடங்குகள் என்பன இப்பிரதேசத்தில் இந்துக்களிடமும் பௌத்தர்களிடமும் பரஸ்பரத் தொடர்புகளை கொண்டுள்ளன. இவ்வகையில் இந்து, பௌத்த மக்களின் பிறப்புக் கிரியைகளுக்கிடையிலான பரஸ்பர தொடர்புநிலைகளை வெளிக்காட்டுதல் இவ்வாய்வின் முக்கிய நோக்கமாகும். இங்கு இவ்விரு சமூகங்களுக்கிடையே பண்பாட்டு இடைவினைகள் மூலம் பண்பாட்டுக் கலப்பு ஏற்பட்டுள்ளமைக்கு சிறந்த அடையாளங்களாக பிறப்புக் கிரியைகள் உள்ளன என்பது இவ்வாய்வின் பிரச்சினையாகும். இந்துக்களினதும், பௌத்தர்களினதும் மரணக்கிரியைகளை தனித்தனியே ஆய்வு செய்து அவற்றை ஒப்பிட்டு நோக்குவதற்கு ஒப்பியலாய்வு பயன்படுத்தப்படும். களவாய்வு மூலம் பெறப்படும் தரவுகள் இவ்வாய்வுக்கான முதலாம்தர மூலங்களாக அமைகின்றன. ஆய்வின் துணை மூலங்களாக இந்து, பௌத்த மதங்களின் பண்பாடு, வாழ்வியல் நெறிகள் தொடர்பாக வெளிவந்த நூல்கள், இறுவெட்டுக்கள் என்பன பயன்படுத்தப்படுகின்றன. அம்பாறையில் மனிதனின் பிறப்பு நிகழ்ந்தமை முதல் இடம்பெறும் சடங்குகளும் நம்பிக்கைகளும் பல இடங்களில் இவ்விரு சமூகத்திலும் ஒரே தன்மைகளைப் பெறுகின்றன. பிறப்புக் கிரியைகளின் பண்பாட்டு இடைவினைகள் மூலம் இடம் பெறும் இந்து பௌத்த மதங்களின் பண்பாட்டுக் கலப்பு பற்றிய ஆய்வு இத்தேவையின் அத்தியாவசியத்தை உணர்த்தும். இத்தேசத்தின் பல்லின சமூகங்களின் ஒன்றுபட்ட நடத்தை முறைக்கும் இது வழிசமைக்கும்.

**பிரதான சொற்கள்:** பௌத்தம், இந்துமதம், பிறப்புக்கிரியைகள், பண்பாட்டு இடைவினைகள்

### (01) ஆய்வு அறிமுகம்

இலங்கையில் பண்டைய காலத்திலிருந்து மக்களிடையே பெரும் வழக்கில் இருந்த மதங்களாக இந்துமதமும் பௌத்தமதமும் உள்ளன. இவ்விரு மத மக்கள் தமக்கிடையே மிக நெருங்கிய தொடர்புடையவர்களாக காலந்தோறும் இருந்து வருகின்றனர். இந்துமதத்தைக் கடைப்பிடிப்பவர்களாக தமிழர்களும் பௌத்தமதத்தைக் கடைபிடிப்பவர்களாக சிங்கள இனத்தவர்களும் உள்ளனர். பல்வேறு காரணங்களால் இவ்விரு இனமக்களும் முரண்பாடுகளைச் சந்தித்த போதிலும் இவர்களது பண்பாட்டுக் கலப்பு என்பது தவிர்க்க முடியாததொன்றாகவே இருந்து வந்துள்ளது. இலங்கையில் இருசமூகங்களின் இடைவினைகளால் பண்பாட்டுக்கலப்பு ஏற்பட்டுள்ளது. இலங்கையைப் பொறுத்தவரை இந்துக்களும் பௌத்தர்களும் இடைவினைகளுக்குட்படுகின்றனர். அது உடன்பாடான இடைவினைகளாகவோ எதிர்மறையான இடைவினைகளாகவோ இருக்கலாம். ஆனால் இவ்வாறு ஏற்படும் எந்தவொரு இடைவினைகளும் இவ்விருமதங்களுக்கிடையிலான பண்பாட்டுக்கலப்பை ஏற்படுத்தியுள்ளது.

கிழக்கிலங்கை மாவட்டங்களுள் அம்பாறை மூவின மக்களும் செறிந்து வாழுமிடமாகும். பௌத்தர்களோடு இந்துக்கள் இணைந்து வாழும் பல பிரதேசங்கள் இங்குள்ளன. இங்கு இவ்விரு மதத்தவர்க்கிடையே பண்பாட்டுக் கலப்பு அதிகமாக இடம் பெற்றுள்ளன. இறை வழிபாடுகள், வாழ்க்கை நெறிமுறைகள், வாழ்வியற் சடங்குகள் மற்றும் ஏனைய பண்பாட்டம்சங்கள் என்பன இப்பிரதேசத்தில் இந்துக்களிடமும் பௌத்தர்களிடமும் பரஸ்பரத் தொடர்புகளை கொண்டுள்ளன. இவ்வகையில் இந்து, பௌத்த மக்களின் பிறப்புடன் தொடர்பான கிரியைகளுக்கிடையிலான பரஸ்பர தொடர்புநிலைகளை வெளிக்காட்டுதல் இவ்வாய்வின் முக்கிய நோக்கமாகும். அம்பாறை வாழ் இந்து, பௌத்த சமூகங்களுக்கிடையே பண்பாட்டு இடைவினைகள் மூலம் பண்பாட்டுக் கலப்பு ஏற்பட்டுள்ளது. அதற்கு ஒரு சிறந்ததொரு அடையாளமாக இக்கிரியைகள் உள்ளன என்பது இவ்வாய்வின் பிரச்சினையாகும்.

To whom correspondence should be addressed: subaraj84@yahoo.com

[138] Lecturer, Department of Languages, South Eastern University of Sri Lanka.

[139] Professor, Department of Hindu Civilization, University of Jaffna.

அம்பாறை பல்லின மக்கள் இணைந்து வாழும் பிரதேசமாதலால் பிற இனங்களின் மதம், மொழி, பண்பாடு, வாழ்வியல் நெறிகளை மதித்தும் போற்றியும் நடக்க வேண்டியது இன்றியமையாததொன்று. பிறப்புக்கிரியைகளின் பண்பாட்டு இடைவினைகள் மூலம் இடம் பெறும் இந்து பௌத்த மதங்களின் பண்பாட்டுக் கலப்பு பற்றிய ஆய்வு இத்தேவையின் அத்தியாவசியத்தை உணர்த்தும். இத்தேசத்தின் பல்லின சமூகங்களின் ஒன்றுபட்ட நடத்தை முறைக்கும் இது வழிசமைக்கும்.

**(02) இலக்கிய மீளாய்வு**

இந்து, பௌத்த சமய இடைவினைகள் தொடர்பான ஆய்விலே 'இடைவினைகள்' இடம் பெறுவதற்கான அடிப்படைக் காரணங்களை அறிவது இன்றியமையாதது. இந்து மதத்தை சேர்ந்த சித்தார்த்தரே பின்பு புத்த மதத்தை உருவாக்கினார். அவரது நோக்கம் ஒரு மதத்தை உருவாக்குவதாக அமையவில்லை. அவரது இறப்பிற்கு பின்னரே அவரது சிந்தனைகள் மதமாக்கப்பட்டன. பின்பு அதில் பல பிரிவுகளும் தோன்றின. இந்த பிரிவுகளுக்கு இந்துமதத் தொடர்புகளும் முக்கிய காரணங்களாகும். இவ்வாறு ஆரம்பம் முதலே இவ்விரு மதங்களுக்கிடையில் நெருங்கிய தொடர்புகள் உள்ளன. இந்துமதத்தில் இருந்துதான் பௌத்தமதம் உருவாகியது என்பதற்கான பல ஆதாரங்களை புத்தசரித்திரம், பௌத்ததர்மம், பௌத்தசங்கம் நூலின் மூலம் அறியலாம். (சாமிநாதையர், 1945) பௌத்தமதத்தின் மூலநூல்கள், பௌத்தத்தின் வளர்ச்சிப் போக்குகள், பௌத்த தர்மம் முதலியனவற்றையும் இந்நூலில் அறிந்து கொள்ளலாம். குறிப்பாக பௌத்தத்தின் அடிப்படைச் சிந்தனைகள் உபநிடதங்களில் இருந்துதான் தோன்றின எனும் பிரதான கருத்தியலை இந்நூல் கொண்டுள்ளது.

இந்துச் சிந்தனை மரபில் மூலப்பரம்பொருளைக் குறிப்பதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற பல்வேறு இலக்கணங்கள் புத்தருக்குரியது என்பதற்கான கல்வெட்டு ஆதாரங்களை வீரசோழியம் நூலில் கண்டு கொள்ளலாம். (கோவிந்தசாமி, 1993) வரலாற்றில் இந்து, பௌத்த தொடர்புகள் இடம் பெறுவதற்கான சாத்தியமான கூறுகளை பல கால கட்டங்களில் அவதானிக்க முடிகின்றது. தமிழர் நாகரிகமும் பண்பாடும் நூலில் இந்துசமயம் மலர்ச்சி பெற்ற காலத்தில் புத்தரை திருமாலின் அவதாரம் என்று ஏற்றுக்கொண்ட இந்துக்கள் அமராவதியிலிருந்த புத்தர் கோயிலில் இந்து மரபுப்படி வழிபாடு செய்யத் தொடங்கியமை, இதனால் பல பௌத்த கோயில்கள் இந்துக் கோயில்களாக மாறியமை போன்ற செய்திகளை ஆதாரங்களுடன் அறிய முடிகின்றது. (தட்சிணாமூர்த்தி, 2005)

இவ்வாய்வின் முன்னெடுப்பில் இந்து, பௌத்த சமயங்களின் தோற்றம், வளர்ச்சிப் போக்குகள் பற்றி ஆராய்தல் அவசியமாகின்றது. பண்பாட்டு இடைவினைகள் இடம் பெறுவதற்கான சூழ்நிலைகளை புரிந்து கொள்வதற்கு இவ்வரலாற்றுப் பார்வை அவசியமாகின்றது. பௌத்தத்தின் தோற்றம், அம்மதம் தமிழ்நாடு வந்தமை, பௌத்தமத ஆலயங்கள், பௌத்த தத்துவம், பௌத்த ஒழுக்கவியல் என்பவற்றோடு முக்கியமாக பௌத்தத்திற்கும் இந்துமதத்திற்கும் உள்ள தொடர்புகள் போன்ற விடயங்களைத் பௌத்தமும் தமிழும் நூல் மூலம் அறிய முடிகின்றது. (மயிலை சீனி வேங்கடசாமி, 2002) ஈழத்தில் பண்டைய காலத்து இந்துசமய வளர்ச்சியையும் பௌத்த சமயத்தின் வளர்ச்சியுடன் அது வளர்ந்து சென்ற விதத்தினையும் பண்பாட்டு இடைவினைகள் இடம் பெற்றமைக்கான சாத்தியக்கூறுகளையும் ஈழத்து இந்து சமய வரலாறு நூலில் அறிந்து கொள்ள முடிகின்றது. (சிற்றம்பலம், 1996) ஆதிகாலத்தில் இலங்கையில் இந்துசமயத்தின் வளர்ச்சி பௌத்தமத வளர்ச்சியோடு இணைந்து சென்றமை பற்றியும் இந்து, பௌத்தமத பண்பாட்டு இணைப்புக்களைப் பற்றியும் ஆதி இலங்கையில் இந்துமதம் நூலில் அறியமுடிகின்றது. (இந்திரபாலா, 1978)

பண்பாட்டு இடைவினைகள் எனும் சமூகவியல் செயற்பாட்டில் வழிபாட்டுத் தொடர்பு முக்கிய இடத்தினைப் பெறுகின்றது. இலங்கையில் இந்து, பௌத்த மக்களின் வழிபாடுகளுக்கிடையிலான தொடர்பிலே நகர வழிபாடுகளை விட கிராமிய வழிபாடுகளுக்கிடையிலேயே நெருங்கிய தொடர்கள் உள்ளன. நாடகம் அரங்கியல் பழையதும் - புதியதும் நூலில் இந்து, பௌத்த கிராமிய மக்களால் இயற்றப்படும் சடங்குகளுக்கிடையிலான தொடர்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. பலியிடல், செய்வினை செய்தல் (சூன்யம் வைத்தல்) போன்ற வழிபாட்டு அம்சங்களையும் இந்நூல் கிராமிய சடங்காக நோக்குகின்றது. இவற்றை

நாடகப்பாணியில் இது விபரிக்கின்றது. இந்து, பௌத்த மதங்களுக்கிடையிலான அறியப்படாத ஆழமான தொடர்புகள் இதில் இடம் பெற்றுள்ள போதிலும் அழகியல் நோக்கில் இது ஆராயப்பட்டுள்ளமையை அறிந்து கொள்ள முடிகின்றது. (மௌனகுரு, 1996) இலங்கையில் இந்துமதத்திற்கும் பௌத்த மதத்திற்கும் இடையேயுள்ள பரஸ்பர தொடர்புகளை இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வெளியீடான ''இந்துசமயமும் அவைதிக நெறிகளும்'' நூலில் 'தென்னிலங்கையில் இந்து சமயம்' கட்டுரையில் வரலாற்று அடிப்படையில் அறியமுடிகின்றது. (பத்மநாதன், 2013)

**(03) ஆய்வு முறையியல்**

பண்புசார் ஆய்வாக அமையும் இவ்வாய்வு மாதிரிமுறையில் தரவுகளை சேகரித்து பகுப்பாய்வுக்குட்படுத்துகின்றது. அம்பாறை மாவட்டத்தின் 20 பிரதேச செயலகப்பிரிவுகளில் லகுஹல, அட்டாளைச்சேனை, ஆலையடிவேம்பு, இறக்காமம், கல்முனை (தமிழ்), நாவிதன்வெளி, பொத்துவில், சம்மாந்துறை ஆகிய எட்டுப் பிரதேச பிரிவுகள் ஆய்வு மாதிரிகளாகக் கொள்ளப்படுகின்றன.

இவ்வாய்வு ஒப்பியலாய்வு முறை, வரலாற்றியல் ஆய்வு முறைகளை பிரதானமாகக் கொள்கின்றது. இந்துக்களினதும், பௌத்தர்களினதும் பிறப்புக்கிரியைகளை தனித்தனியே ஆய்வு செய்து அவற்றை ஒப்பிட்டு நோக்குவதற்கு ஒப்பியலாய்வு பயன்படுத்தப்படும். களவாய்வு மூலம் பெறப்படும் தரவுகள் இவ்வாய்வுக்கான முதலாம்தர மூலங்களாக அமையவுள்ளன. வினாக்கொத்துக்கள், நேர்காணல்கள், பங்குபற்றுதல் அவதானம் போன்றன மூலம் பெறப்படும் தரவுகள் பகுப்பாய்வு செய்யப்படும். இவை ஆய்விற்கு முதலாம்தர மூலங்களாகப் பயன்படுத்தப்படும். ஆய்வின் துணை மூலங்களாக இந்து, பௌத்த மதங்களின் பண்பாடு, வாழ்வியல் நெறிகள் தொடர்பாக வெளிவந்த நூல்கள், இணையச் செய்திகள், பத்திரிகைத் தகவல்கள், ஒலியொளி நாடாக்கள், இறுவெட்டுக்கள் என்பன பயன்படுத்தப்படும்.

**(04) ஆய்வுப் பெறுபேறுகளும் கலந்துரையாடலும்**

வாழ்வியற் சடங்குகள் என்பது மனிதனது வாழ்வின் நலன் கருதி செய்யப்படும் சடங்குகளாகும். அச்சடங்குகள் ஒவ்வொரு மதத்தினதும் கலாசாரத்தை வெளிப்படுத்துகின்றது. வழிவழியாக செய்யப்பட்டுவந்த சடங்குகளை எதிர்காலத்தில் அழிந்து விடாது இருக்கும் வகையில் அவற்றை பாதுகாக்க வேண்டும். அம்பாறை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இந்துக்களின் வாழ்வியலுக்கும் பௌத்தர்களின் வாழ்வியலுக்கும் மிக நெருங்கிய தொடர்புகள் உள்ளன. இந்து மதத்திலிருந்து பல்வேறு விடயங்களை உள்வாங்கிக் கொண்ட பௌத்தமானது தன் வாழ்வியற் சடங்கு முறைமைகளில் இந்து மதத்துடன் சில விடயங்களில் ஒன்றித்தும் சில விடயங்களில் தனித்தும் செயற்படுகிறது. அவ்வகையில், இந்து மதமானது கடவுள் உண்டு என்றும் ஆன்மா உண்டு என்றும் சதுர்வர்ணத்தை ஏற்பதாகவும் காணப்பட, பௌத்தமானது கடவுள் இல்லை என்றும் ஆன்மா இல்லை என்றும் சதுர்வர்ணத்தை நிராகரிப்பதாகவும் அமைகிறது. இருப்பினும் ஆரம்பத்தில் பௌத்தம் இவற்றை எதிர்த்தாலும் காலப்போக்கில் கடவுள், ஆன்மா, சாதி அமைப்பு போன்ற அம்சங்களை தன்னோடு இணைத்துக்கொண்டு செயற்படத்தொடங்கியது. இன்றைய அளவிலும் இவ்விடயங்கள் பௌத்தத்தோடு இணைந்தே காணப்படுகின்றன.

இலங்கையில் பௌத்தர்களும் இந்துக்களும் நெருங்கிய குடியிருப்புகளையும் நித்திய வாழ்வியல் நெறிமுறைகளையும் கொண்டிருப்பதனால் கணிசமான பண்பாட்டம்சங்களை வழங்கியும், உள்வாங்கியும் வருகின்றனர். அவ்வகையில் பிறப்புடன் தொடர்பான கிரியைகளில் இடம் பெறும் சம்பிரதாயங்களில் இவ்விரு சமுதாயங்களும் கணிசமானளவு ஒன்றுபட்டு நிற்கின்றன. அவற்றினை தனித் தனிக் கூறுகளாக எடுத்தாரய்வது அவசியமானது.

**சேனை தொடுத்தல் - ரன்கிரி கட கேம**

சேய்+நெய்+தொடுத்தல் என்பதே சேனை தொடுதல் என வழங்குகின்றது. குழந்தை பிறந்தவுடன் பெரியவர்களை அழைத்து, குழந்தை தாய்பால் குடிப்பதற்கு முன்பு குழந்தையின் நாவில் இனிப்புக் கலந்த நெய் அதாவது எண்ணெய்யைத் தொட்டு வைக்கும் வழக்கத்தையே சேனை தொடுத்தல் என்பர். சேனை என்பதைக் 'குழந்தை

பிறந்தவுடன் புகட்டும் இனிப்புக் கலந்த திரவ உணவு' என்பர்.[1] சேனை தொட்டு வைக்கும் பெரியோரின் குணநலன்கள் குழந்தைக்கு வரும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இந்துக்களால் இச்சடங்கு செய்யப்படுகின்றது.

பௌத்தர்கள் இதிலிருந்து சற்று வேறுபட்ட முறையில் இதனை செய்கின்றனர். இதனை இவர்கள் 'ரன்கிரி கட கேம' என்று கூறுவர். 'ரன்' என்றால் தங்கம், 'கிரி' என்றால் பால்.அதாவது குழந்தை பிறந்ததும் தாய்பால் கொடுப்பற்கு முதல் தங்கத்தை உரசி அதில் சற்று நீர் விட்டு அந்நீரை பெரியவர்கள் யாரேனும் குழந்தையின் நாவில் தொட்டு வைப்பார்கள்.பெரும்பாலும் இது குழந்தையின் தாயின் தாயாரால் (குழந்தையின் அம்மம்மா) செய்யப்படும்.[2] இல்லையெனில் குடும்பத்தின் பெரியவர்களால் செய்யப்படும்.இது குழந்தை நல்ல செல்வச் செழிப்புடன் வாழ வேண்டும் என்பதற்காக செய்யப்படுகின்றது.

இந்து மதம் குழந்தை பிறப்பை வளைகாப்பு முதலிய சடங்குகள் செய்து கொண்டாடினாலும் குழந்தை பிறந்த பின்னர் மூன்று மாதம் வரை துடக்குக் காலப்பகுதியாகக்கொள்ள, பௌத்தமோ வளைகாப்பு போன்ற சடங்குகளின்றி குழந்தை பிறந்த பின்னும் அதனை துடக்காகக் கருதாது சாதாரண நிகழ்வாகவே கருதுகின்றது.[3] இருப்பினும் குழந்தைக்கு 'சேனைப்பால் தொட்டு வைத்தல்' என்பது இரு மதத்திலும் நற்குணங்கள் வாய்க்கப்பெற்ற குடும்ப அங்கத்தவராலேயே இடம்பெற வேண்டுமென்பதனை தன் மரபாகக் கொண்டுள்ளன.

ஆகவே இரு மதத்தவர்களும் குழந்தை பிறந்தவுடன் குழந்தையின் எதிர்காலத்தை முன்னிட்டு இதனைச் செய்வதை அவதானிக்க முடிகின்றது. குழந்தைக்கு நாவில் வைக்கும் பதார்த்தத்தில் மாத்திரமே வேறுபாடு உள்ளது. இந்துக்கள் தேனையும், பௌத்தர்கள் தங்கம் உரசிய நீரையும் வைக்கின்றனர்.[4]

**தொட்டிலில் இடல்**

குழந்தையைத் தொட்டிலில் கிடத்தித் தாலாட்டு பாடித் தூங்க வைக்கும் பழக்கம் தமிழரின் தனிப் பண்பாகும். குழந்தையை முதன்முதலில் தொட்டிலில் இடுவது நாட்டுப்புற மக்களால் ஒரு சடங்காகவே செய்யப்படுகின்றது.[5] குழந்தையின் தாய்மாமான் தொட்டில்துணி, தொட்டில்கம்பு, தொட்டில்கயிறு, புத்தாடை ஆகியவற்றை கொண்டுவந்து தொட்டில் கட்டி அதில் குழந்தையை கிடத்தி மூன்று முறை ஆட்ட வேண்டும். இவ்வாறு செய்வதே தொட்டிலிடல் சடங்காகும். தமிழரின் தாலாட்டுப் பாடல்களில் இது குறித்த செய்திகளைக் காணலாம்.[6]

> "பச்சை இலுப்பை வெட்டி – என்கண்ணே உனக்கு
> பால்வண்ணத் தொட்டில்கட்டி
> தொட்டிலிட்ட அம்மாமனும் -என்கண்ணே
> தூரவழி போறாரம்மா"

என்ற பாடல்வரி தொட்டிலிடலை குறித்து நிற்கின்றது. பௌத்தர்களை பொறுத்தவரையில் அவர்கள் இச்சடங்கினை செய்வதில்லை. சாதாரணமாக வீட்டில் உள்ளவர்களே தொட்டில் கட்டி குழந்தையை தொட்டிலில் கிடத்துகின்றனர். இந்துக்களை போல இவர்கள் இதற்காக எந்தவொரு சடங்கும் செய்வதில்லை.[7]

**பெயர் சூட்டுதல்**

இந்துக்களை பொருத்தவரையில் பெயர் சூட்டுதல் என்பது முக்கியமான ஒரு நிகழ்வாகும். இந்த சடங்கினை 'நாமகரணம்' என்ற வடமொழி வழக்கிலும் அழைக்கின்றனர். மனிதனின் எதிர்காலத்திற்கு பெயரானது பெறும் பங்குவகிக்கின்றது. பெயரின் ராசி பலன் ஒருவனின் வாழ்வின் ஏற்றத் தாழ்வுகளில் முக்கிய இடம் வகிக்கின்றது. குழந்தையின் ராசி, நட்சத்திரம் பிறந்த நேரம் என்பவற்றை அடிப்படையாக் கொண்டு குழந்தைக்கு உரிய நாம எழுத்து தீர்மானிக்கப்படுகின்றது. இந்துக்கள் இவற்றினை கருத்திற் கொள்ளாது குழந்தைக்கு பெயர் வைப்பதில்லை.[8] ஜாதகத்தில் நம்பிக்கை கொண்ட இந்துக்கள் புரோகிதர் ஒருவர் மூலம் குழந்தைக்கு உரிய நாம எழுத்தை தெரிவு செய்து குழந்தைக்கு பெயர் வைக்கின்றனர்.

இதன் அடிப்படையில் வேதியரால் பெயர் தெரிவு செய்யப்பட்டதன் பின்பு வேதியர் குழந்தையின் நட்சத்திரத்தை கூறிப் பூசை செய்வார்.[9] பின்னர் தாய்மாமன் அல்லது பெரியவர் ஒருவர் மடியில் குழந்தையை இருத்தி,குழந்தையின் பெயரை வலது காதில் மூன்று முறை ஓதி கற்கண்டு தண்ணீர் பருக்குவர். குழுமியிருப்போருக்கு இனிப்புப் பானம் வழங்கப்படும்.இதன் பொருள் வம்சத்தில் தோன்றியுள்ள குழந்தை இறைவன் அருளால் பெயரும் வாழ்வும் பிரகாசிக்க வேண்டும் என்பதாகும்.

பௌத்தர்களை பொறுத்தவரையில் இந்துக்களை போல பெயர் சூட்டு விழாவை விமர்சயாக செய்வதில்லை.ஆயினும் இவர்கள் பெயரை தேர்ந்தெடுக்கும் முறை இந்துக்களை போலவே உள்ளது. நாள் நட்சத்திரம் பார்த்தல், ஜாதகம் பார்த்தல் போன்றன இவர்களது வாழ்விலும் உள்ளது. குழந்தை பிறந்த நேரம் (நெகத), ராசி (லக்ணய), பிறந்த திகதி என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு குழந்தைக்குரிய நாம எழுத்தை தீர்மானிக்கின்றனர். இந்துக்கள் வேதியர் மூலம் பெயரை தேர்ந்தெடுப்பது போல பௌத்தர்கள் பௌத்த மதகுருமார்கள் மூலம் பெயரை தேர்ந்தெடுக்கின்றனர்.[10] இந்து மக்களை பொறுத்தவரையில் ஒருவரது பெயரின் முதல் எழுத்து அவரது தந்தையின் பெயராகும். ஆனால் பௌத்தர்கள் குழந்தைக்கு பெயர் வைக்கும் போது குழந்தையின் தந்தையின் பெயருடன், தந்தை வழி சமூகத்திற்குரிய பெயரையும் இணைத்து வைப்பார்கள்.[11]

உதாரணம்

குழந்தையின் பெயர் - அரவிந்த

தந்தையின் பெயர் - ரத்னாயக

தந்தை வழி சமூகத்திற்குரிய பெயர் - முதியன்சேலாகே

குழந்தையின் முழுப்பெயர் - முதியன்சேலாகே ரத்னாயக அரவிந்த என்பதாக அமையும்.

பௌத்த ஆண்மகனிற்கு ஆண்குழந்தை பிறந்தாலும் பெண்குழந்தை பிறந்தாலும் தந்தை வழி சமூகத்திற்குரிய பெயர் குழந்தையின் பெயருடன் சேர்க்கப்படும். ஆனால் பெண்களிற்கு அவ்வாறு இல்லை. பெண்ணின் கணவனது தந்தை வழி சமூகப்பெயரே குழந்தைக்கு வைக்கப்படும்.

ஆகவே இந்துக்களையும் பௌத்தர்களையும் பொறுத்தவரையில் பெயர் வைத்தலானது குழந்தையின் பிறந்த நேரம், பிறந்த திகதி, ராசி என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு வைக்கப்படுகின்றது.[12] பெயர் வைத்தலில் பௌத்தர்களை விட இந்துக்களே அதிகமான சடங்கு சம்பிரதாயங்களை மேற்கொள்கின்றனர் எனக் கூறலாம். மேலும் பெயர் அமைப்பிலும் இரு மதத்தவர்களிற்கும் இடையில் வித்தியாசங்களும் காணப்படுகின்றன.

**மொட்டை அடித்தல்**

மொட்டை அடித்தல் என்பது முதன்முதல் குழந்தைக்கு முடி இறக்குவதை குறிக்கும். இதை 'சூடாகரணம்' என்றும் கூறுவர். குழந்தை பிறந்து 31 நாட்கள் வரை குழந்தையை வெளியில் கொண்டு செல்லாது 31ஆம் நாள் ஆசௌச கழிவு நடத்தப்படும். இதனை 31ஆம் நாள் துடக்குக் கழிவு என்றும் சொல்வர்.[13] 31ஆம் நாள் வீட்டைச் சுத்தப்படுத்தி மஞ்சள் நீர் தெளிக்கப்பட்டு, வாசலில் நிறைகுடம் வைத்து விளக்குகள் வைக்கப்படும். அன்று குழந்தையை குழந்தையின் தாய்மாமன் அல்லது பெரியவரின் மடியில் வைத்து முடியை இறக்குவர். பின்பு குழந்தையின் தலையில் மஞ்சள் பூசப்படும். இறக்கப்பட்ட முடி ஓடும் நீரில் விடப்படும். சிலர் இச்சடங்கினை தங்களது குலதெய்வ கோயிலிலும் செய்வர். கருவில் வளர்ந்த முடி முற்பிறப்பில் செய்த வினைகள் கருமங்கள் என்பதால் தான் குலதெய்வம் கோயிலில் இந்த சடங்கினை செய்கின்றனர்.

பௌத்தர்கள் இச்சடங்கை குழந்தை பிறந்து 31ஆம் நாள் விகாரையில் செய்கின்றனர். சுப வேளையில் குழந்தையின் முடியை இறக்குவார்கள். இறக்கப்பட்ட முடியை ஓடும் நீரில் விடுவார்கள். அன்றைய தினம் பௌத்த பிக்குகளிற்கு பாற்சோறு கொடுப்பது முந்தைய காலங்களில் இருந்து இடம்பெறும் ஒரு வழக்கமாகும்.[14]

இந்துக்களையும் பௌத்தர்களையும் பொருத்தவரையில் இச்சடங்கானது குழந்தை பிறந்து முதலாம் மாத பூர்த்தியில் செய்யப்படுகின்றது. இதில் பௌத்தர்களை விட இந்துக்களே அதிகமான கிரியை முறைகளை

செய்கின்றனர். ஆயினும் இரு மதங்களையும் பொறுத்தவரையில் இச்சடங்கு முறையானது தற்காலத்தில் மாற்றமடைந்து கொண்டு வருவதை அவதானிக்கலாம்.[15] சிலர் நேர்த்தி வைத்து ஆலயங்களிற்கு அல்லது விகாரைக்குச் சென்று முடியை இறக்குகின்றனர். மற்றும் சிலர் முடி திருத்தும் இடங்களில் முடி இறக்குவதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

**காது குத்துதல்**

குழந்தை பிறந்து ஆறு மாதத்தில் அல்லது ஒரு வருடத்தில் குழந்தையின் இரண்டு காதுகளிலும் காதணி அணிவதற்கேற்ற வகையில் துளையாகக் குத்தப்படும். வலது காது குருபகவான். இடது காது புதன். குரு ஞானத்திற்கு உரியவர். புதன் அறிவுத்திறனுக்கு உரியவர். காது குத்துவதால் குழந்தைக்கு இந்த இரு கிரகங்களின் சக்தியும் கிடைக்கின்றது.[16] வீட்டில் அல்லது கோயிலில் காது குத்தும் சடங்கு இடம்பெறும். தாய்மாமனின் மடியில் குழந்தையை இருத்தி காது குத்தப்படும். மேலும் தீமை தரும் ஆவிகளிடமிருந்து குழந்தைகளை பாதுகாக்க காது, மூக்கு ஆகிய பகுதிகளில் துளையிட்டு உலோக ஆபரணங்கள் அணிவிக்கப்படுவதாகவும் கூறப்படுகின்றது. த்விதியை, திருதியை, பஞ்சமி, சஷ்டி, சப்தமி, துவாதசி, திரயோதசி என்பன காது குத்துவதற்குரிய திதிகளாகும்.[17]

பௌத்தர்களை பொருத்தவரையில் இச்சடங்கானது தற்காலங்களில் பெரியளவில் இடம்பெறுவதில்லை. ஆரம்ப காலங்களில் இதனை பௌத்தர்கள் ஓர் சடங்காக செய்தனர். விகாரைகளிற்கு குழந்தையை அழைத்துச் சென்று பெரியவர்களால் காது குத்தப்படும். மொனராகலை பிரதேசத்தை பொருத்தவரையில் குழந்தையை விகாரைக்கு அழைத்துச் சென்று தோடம்மர முள்ளினால் குழந்தைக்கு காது குத்தப்படுகின்றது. வேறு பிரதேசங்களில் தோடம்மர முள்ளினால் காது குத்தப்பட்டு தோடை அணிவிக்காது குத்தப்பட்ட காயம் குணமாகும் வரையும் கறிவேப்பிள்ளை காம்பு காதின் துளையில் அணியப்பட்டிருக்கும்.[18] சிலரிற்கு தங்கம் அணிவது ஒத்துக்கொள்வதில்லை. குழந்தையின் காதில் காயம் ஏற்படாமல் இருக்க இவ்வாறு செய்யப்படுகின்றது.

பௌத்தர்களையும் இந்துக்களையும் பொறுத்தவரையில் காது குத்தல் சடங்கானது வெவ்வேறு முறைகளில் இடம்பெறுவதை அவதானிக்கலாம். பிரதேசத்திற்கு பிரதேசம் வித்தியாசமான முறைகளில் இதனை செய்கின்றனர். எனினும் ஆரம்ப காலங்களில் இடம்பெற்றதைப் போல தற்காலங்களில் இச்சடங்கு இடம்பெறுவதில்லை.[19] நகை கொள்வனவு செய்யும் கடைகளிலும், வைத்தியசாலைகளிலும் குழந்தைகளிற்கு காது குத்தப்படுகின்றது. ஆலயங்களிலோ அல்லது விகாரைகளிலோ இச்சடங்கு தற்போது இடம்பெறுவதில்லை.

**சோறுட்டல்**

குழந்தைக்கு முதன்முதல் சோறு கொடுப்பதே சோறுட்டல் சடங்காகும். இதை 'அன்னப்பிரசனம்' என்றும் கூறுவர். குழந்தை பிறந்த 6ஆவது மாதம் சோறுட்டல் சடங்கை செய்ய வேண்டும். கிராம மக்கள் தங்கள் குலதெய்வ கோயிலில் இதை செய்வார்கள். அன்னப்பிரசனத்திற்கு அசுபதி,மிருகசீரிடம்,உத்திரம்,சுவாதி,சதயம், திருவோணம்,ரேவதி நட்சத்திர நாட்களிலும்,சந்திர ஹோரை நேரத்தில் பசுவை காண்பித்து விட்டு வெள்ளிக்கிண்ணத்தில் பசும்பால்,பசும்நெய்,தேன் கலந்த சாதத்தை ஊட்ட வேண்டும்.[20] குழந்தைக்கு இந்நாளில் கொடுக்கப்படும் உணவுகள் பிரதேசத்திற்கு பிரதேசம் மாறுபட்டு காணப்படும்.இவ்வாறு குறிப்பிட்ட நட்சத்திரத்தில் தெய்வ சந்நிதியில் உண்ணும் குழந்தைகளுக்கு ஜலதேவதையின் அருளும்,ஔஷாதி தேவதையின் அருளும் கிடைக்கும்.ஜல தேவதையின் அருளால் குழந்தைகளுக்கு காய்ச்சல் ஜல தோஷம் உள்ளிட்ட நோய்கள் வராது.அப்படி வந்தாலும் ஔஷாதி (மருந்து)தேவதையின் அருளால் அது உடனே நீங்கிவிடும்.

பௌத்தர்களை பொருத்தவரையில் இச்சடங்கை வீட்டில் அல்லது விகாரையில் செய்கின்றனர். இதனை "இன்துல் கட கேம" என்று கூறுகின்றனர். பௌத்தர்கள் சோறுட்டலை சற்று வித்தியாசமான முறையில் செய்கின்றனர்.[21] சுப தினம் ஒன்றில் வெள்ளை நிற துணியொன்றை தரையில் விரித்து அதன் மேல் தாமரை இலையை அல்லது வாழை இலையை வைத்து, அதில் உணவு வகைகளையும் ஒரு இலையிலும், பணம்

மற்றும் தங்க நகைகளை இன்னுமொறு இலையிலும் வைப்பர். இதன் அருகில் விளக்கு ஒன்றும் கட்டாயமாக ஏற்றப்பட்டிருக்கும்.பின்பு சுப நேரத்தில் குழந்தைக்கு இரண்டு இலையில் ஒன்றை எடுப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும்.

குழந்தை உணவு வகைகள் உள்ள இலையை தொட்டால் குழந்தை நல்ல ஆரோக்கியமானதாக இருக்கும் என்றும்,பணம் மற்றும் தங்க ஆபரணங்கள் உள்ள இலையை தொட்டால் குழந்தை நல்ல செல்வாக்குடன் இருக்கும் என்றும் கூறப்படுகின்றது.[22] இவ்வாறு ஒரு சாராரும் இன்னொறு சாரார் உணவு உள்ள இலையை குழந்தை தொட்டால் குழந்தை உணவில் மிகவும் நாட்டம் உள்ளதாக இருக்கும் என்றும், பணம் மற்றும் தங்க ஆபரணங்கள் உள்ள இலையை தொட்டால் சொத்துக்கள் மீது அதிகம் பற்றுள்ளதாக குழந்தை இருக்கும் என்றும் கூறப்படுகின்றது.இவ்வழக்கம் பிரதேசத்திற்கு பிரதேசம் மாறுபட்டும் காணப்படுகின்றது.பின்னர் தாய்மாமன் குழந்தைக்கு பாற்சோறு ஊட்டுவார்.பின்பு குழந்தையின் இடுப்பில் கருப்பு நிற நூலை கட்டி விடுவார்.இது குழந்தையின் பாதுகாப்பு கருதி கட்டப்படுகின்றது.ஆரம்ப காலங்களில் இச்சடங்கினை விகாரையில் செய்தார்கள்.அச்சந்தர்ப்பங்களில் பிக்குவினால் உணவு ஊட்டப்படும்.[23]

இந்து பௌத்த மதங்களை பொருத்தவரையில் சோறூட்டல் சடங்கானது குழந்தையின் எதிர்கால வாழ்வின் நன்மை கருதி செய்யப்பட்டிருப்பதை அவதானிக்கலாம்.அதிலும் பௌத்தர்கள் இந்துக்களை விட சற்று வித்தியாசமான முறையில் இதனை செய்கின்றனர்.மேலும் புத்தளம் பிரதேசத்தை பொறுத்தவரையில் அங்குள்ள இந்துக்கள் பௌத்தர்களினது சம்பிரதாய முறையில் இச்சடங்கினை செய்வதை அவதானிக்கலாம்.[24] இப்பிரதேசங்களில் பௌத்தர்களின் செல்வாக்கு இந்துக்கள் மத்தியில் ஊடுருவியிருப்பதே இதற்காக காரணமாகும்.

**பல் முளைத்ததும் செய்யும் சடங்குகள்**

குழந்தைக்கு முதன்முதலாக பல் பல் முளைத்ததும் அதற்கான சடங்கினை செய்கின்றனர். இந்துக்களை பொருத்தவரையில் குழந்தைக்கு பல் முளைக்க ஆரம்பிக்கும் போது,குறிப்பிட்ட ஒரு சுப தினத்தில் கொழுகட்டை செய்து அதில் கொஞ்சத்தை ஒரு பாத்திரத்தில் இட்டு,தாய்மாமன் மடியில் குழந்தையை இருத்தி அவரது கையால் குழந்தையின் மேல் கொட்டப்படும். சில இடங்களில் தரையில் வெள்ளை நிற துணியை விரித்து அதில் குழந்தையை இருத்தியும் இச்சடங்கு செய்யப்படும்.[25]

பௌத்தர்களை பொருத்தவரையில் இவர்கள் இந்துக்களை போல பல் முளைத்ததும் அதற்கான சடங்குகளை அவர்கள் செய்வதில்லை.எனவே பல் முளைத்ததும் செய்யும் சடங்கானது இந்துக்களிற்கே உரிய சடங்காகும்

**ஏடு தொடக்குதல்**

ஏடு தொடக்கல் என்பது குழந்தைக்கு கல்வியை போதிப்பதற்கு செய்யப்படும் ஒரு சடங்காகும். பொதுவாக இந்துக்கள் இச்சடங்கினை செய்யத் தவறுவதே இல்லை.இந்துக்களை பொறுத்தவரையில் இச்சடங்கானது விஜயதசமி அன்று செய்யப்படுகின்றது. ஏடு தொடக்கல் ஆலயத்தில் வைத்துச் செய்யப்படும்.குறிப்பிட்ட ஒரு சுப வேளையில் ஐயரினால் தட்டில் இடப்பட்ட பச்சை அரிசியின் மேல் குழந்தையின் கையை பிடித்து எழுத்துக்கள் எழுதப்படும். இச்சடங்கு குழந்தைக்கு 3 அல்லது 4 வயதுகளில் செய்யப்படும்.

பௌத்தர்களும் இச்சடங்கினை செய்கின்றனர். குறிப்பிட்ட ஒரு சுப வேளையில் குழந்தையை விகாரைக்கு அழைத்துச் சென்று பிக்குவினால் தட்டில் இடப்பட்ட பச்சை அரிசி அல்லது மண்ணின் மேல் குழந்தையின் கையை பிடித்து எழுத்துக்கள் எழுதப்படும். குழந்தைக்கு 4 அல்லது 5 வயதுகளில் இச்சடங்கு எனினும் செய்யப்படும்.[26] தற்காலங்களில் இம்முறையில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. விகாரைகளிற்கு கொண்டு செல்லாது கல்வி கற்ற வயதில் பெரியவர் ஒருவரினால் இச்சடங்கு செய்யப்படுகின்றது. மேலும் தற்காலத்தில் கொப்பியில் எழுத்து எழுதப்படுகின்றது.[27]

ஆகவே ஏடுதொடக்கல் சடங்கானது குழந்தைக்கு கல்வியை போதிக்கும் முகமாக இரு மதங்களிலும் செய்யப்படுகின்றமையை காணலாம்.ஏடு தொடக்கும் வயதெல்லையில் இரு மதங்களிற்கு இடையிலும் சில வேறுபாடுகள் காணப்படுகின்றது.[28] மற்றும் ஏடு தொடக்கும் முறையிலும் இரு மதங்களிற்கு இடையில் சிறு வேறுபாடுகள் உள்ளதை அவதானிக்கலாம்.

**தொரட வெடும**

இது பௌத்தர்களிற்கு உரிய சடங்காகும்.இது குழந்தை பிறந்து மூன்று மாதங்களில் செய்யப்படும்.குழந்தை பிறந்ததும் சுப தினம் ஒன்றில் குழந்தையை நீராட வைத்து புதிய ஆடைகளை அணிவித்து விகாரைக்கு அழைத்துச் செல்வார்கள்.விகாரையில் போதி பூஜை செய்யப்படம்.அதாவது அரச மரத்திற்கு நீர் ஊற்றி பூஜை செய்யப்படும்.[29] பிக்குகளினால் குழந்தைக்கு ஆசிர்வாதம் வழங்கப்படும்.கண்டியில் வசிப்பவர்கள் தலதாமாளிகைக்கு கொண்டு சென்று இதனை செய்கின்றனர்.மேலும் இவர்கள் அன்றைய தினம் விகாரைக்கு பாற்சோறு மற்றும் பலகார வகைகளும் கொண்டு செல்வார்கள்.பூஜை முடிந்ததும் அதனை பிறரிற்கு தானமாக கொடுப்பார்கள்.குழந்தையை இவ்வாறு முதன்முதலாக விகாரைக்கு அழைத்த வந்து பூஜை செய்யாமல் குழந்தையை வெளி இடங்களிற்கு அழைத்துச் செல்ல மாட்டார்கள்.இச்சடங்கானது பௌத்தர்கள் குழந்தைக்காக செய்யும் முக்கியமான சடங்காகும். பொரும்பாலும் தற்காலங்களிலும் பௌத்தர்கள் இச்சடங்கினை செய்வது குறிப்பிடதக்க ஒரு விடயமாகும்.இந்துக்களும் குழந்தை பிறந்து தொடக்கு கழிக்கப்பட்டதன் பின்னர் ஆலயங்களிற்கு அழைத்தச் சென்று பூஜை கொடுப்பார்கள்.எனினும் பௌத்தர்களை போல ஒரு சடங்காக செய்வதில்லை.எனவே தொரட வெடும என்ற இச்சடங்கு பௌத்தர்களிற்குரிய முக்கியமான ஒரு சடங்காகும்.[30]

**(05) தொகுப்பும் முடிவுரையும்**

அம்பாறை மாவட்டத்தில் இந்துக்களினதும் பௌத்தா்களினதும் பிறப்பு தொடர்பான சடங்குகளில் இரு சமூகத்தினரும் மேற்கொள்ளும் பொதுவான சம்பிரதாயங்களாக,

- சேனை தொடுத்தல் - ரன்கிரி கட கேம
- பெயர் சூட்டுதல்
- மொட்டை அடித்தல்
- காது குத்துதல்
- சோறுட்டல்
- ஏடு தொடக்குதல்

ஆகியனவற்றை அடையாளங் காணமுடிகின்றது. இதுபோல் இந்துக்களால் மாத்திரம் மேற்கொள்ளப்படும் இறப்புச் சடங்குகளாக,

- தொட்டிலில் இடல்
- பல் முளைத்ததும் செய்யும் சடங்குகள்
-

என்பனவற்றை காணலாம்.

- தொரட வெடும

பௌத்தர்களால் மாத்திரம் மேற்கொள்ளப்படும் இறப்புச் சடங்காக அடையாளங் காணப்பட்டது.

முடிவாக, பிறப்புக் கிரியைகள் போன்ற வாழ்வியற் சடங்குகள் என்பது மனிதனது வாழ்வின் நலன் கருதி செய்யப்படும் சடங்குகளாகும். அச்சடங்குகள் ஒவ்வொரு மதத்தினதும் கலாசாரத்தை வெளிப்படுத்துகின்றது. வழிவழியாக செய்யப்பட்டுவந்த சடங்குகளை எதிர்காலத்தில் அழிந்து விடாது இருக்கும் வகையில் அவற்றை பாதுகாக்க வேண்டும். அம்பாறை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இந்துக்களின் வாழ்வியலுக்கும்

பௌத்தர்களின் வாழ்வியலுக்கும் மிக நெருங்கிய தொடர்புகள் உள்ளன. இவற்றினை இவர்கள் எவ்வித உடன்படிக்கைகளோ, உள்நோக்கங்களோ இல்லாமல் தம்மையறியாமல் செய்து வருகின்றனர். இவ்வாறு இவர்கள் இயங்குவதற்கு பண்பாட்டு இடைவினையே காரணமாகின்றது. இவர்கள் தமது வாழ்வியற் சடங்குகளில் இத்தகைய பரஸ்பரத் தொடர்புகள் உள்ளதென்பதை உணர்வார்களாயின் இவர்களின் உறவுகளில் அன்னியோன்யம் அதிகரிக்கும், பிரிவனைகளை மறப்பர், நல்லிணக்கம் பெருகி ஒன்றுபட்ட நடத்தை முறைகள் உருவாகும் சூழ்நிலைகள் ஏற்படும்.

**அடிக்குறிப்புகள்**

1. மாயாரஞ்சன், 2014, திகாமடுல்ல ஆச்சார்ய, எஸ்.என்.எஸ்.பிரிண்டர்ஸ், கொழும்பு, ப.23
2. நேர்காணல்: கே. புவனேஸ்வரன்., 11.06.2016, வயது – 40, பாணம, தொழில் : விவசாயி
3. நேர்காணல்: வி. குணவர்த்தன., 09.06.2016, வயது – 79, பாணம, தொழில் : இல்லை
4. நேர்காணல்: கமலா., 10.06.2016, வயது – 77, பாணம, தொழில் : இல்லை
5. நேர்காணல்: அன்னலட்சுமி., 18.06.2016, வயது – 56, பாணம, தொழில் : இல்லை
6. நேர்காணல்: கே. துரைசாமி., 20.06.2016, வயது – 66, பாணம, தொழில் : இல்லை
7. நேர்காணல்: கே. புவனேஸ்வரன்., 11.06.2016, வயது – 40, பாணம, தொழில் : விவசாயி
8. நேர்காணல்: வி. சிந்தாமணி., 09.06.2016, வயது – 79, கல்முனை, தொழில் : இல்லை
9. மாயாரஞ்சன், 2014, மே.கு.நூ, ப.37
10. மேலது, ப.56
11. மேலது, ப.56
12. மேலது, ப.57
13. மேலது, ப.58
14. மேலது, ப.58
15. மேலது, ப.60
16. மேலது, ப.61
17. நேர்காணல்: அ.பாக்கியம்., 18.06.2016, வயது – 57, பாணம, தொழில் : இல்லை
18. நேர்காணல்: க. துரை., 20.06.2016, வயது – 66, பாணம, தொழில் : இல்லை
19. நேர்காணல்: க. ஈஸ்வரன்., 11.06.2016, வயது – 40, பாணம, தொழில் : விவசாயி
20. நேர்காணல்: வி. சிந்தா., 09.06.2016, வயது – 79, கல்முனை, தொழில் : இல்லை
21. நேர்காணல்: விமலாதேவி., 10.06.2016, வயது – 77, அம்பாறை, தொழில் : அதிபர்
22. நேர்காணல்: அன்னலட்சுமி., 18.06.2016, வயது – 56, பாணம, தொழில் : இல்லை
23. நேர்காணல்: கே. துரைசாமி., 20.06.2016, வயது – 66, பாணம, தொழில் : இல்லை
24. நேர்காணல்: கே. புவனேஸ்வரன்., 11.06.2016, வயது – 40, பாணம, தொழில் : விவசாயி
25. நேர்காணல்: வி. சிந்தாமணி., 09.06.2016, வயது – 79, கல்முனை, தொழில் : இல்லை
26. மாயாரஞ்சன், 2014, மே.கு.நூ, ப.87
27. மேலது, ப.60
28. எதிரிவீர, எம்., 1998, பௌத்த ஆச்சாரிய, பதும வெளியீடு, ப.36
29. மேலது, ப.32
30. மேலது, ப.35

**உசாத்துணை நூல்கள்**

1. அரங்க. இராமலிங்கம், (1992), **பௌத்தம் போற்றிய பெண் தெய்வங்கள்,** பாரதி புத்தகாலயம், சென்னை.

2. இந்திரபாலா, கா., (2006), **இலங்கையில் தமிழர் ஓர் இனக்குழு பெற்ற வரலாறு,** குமரன் புத்தக இல்லம், ப.39
3. இரகுபரன், க., (2008), **பக்தி நெறியும் பண்பாட்டுக் கோலங்களும்,** இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.
4. இராமச்சந்திரன், நா., (2002), **துடியான சாமிகள்**, மக்கள் வெளியீடு, சென்னை.
5. இன்பமோகன், வ., (2012), **கிழக்கிலங்கைச் சடங்குகள்**, குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
6. எதிரிவீர, எம்., (1998), **பௌத்த ஆச்சாரிய,** பதும வெளியீடு, ப.36
7. ஓஷோ, (தமிழில்), ரமணி, என்., (1982), **தம்மபதம் பாகம் ஐ,** புத்தரின் வழி, கண்ணதாசன் பதிப்பகம், சென்னை.
8. கண்ணகி, க. (பதிப்பு), (2013), **தமிழ் வழிபாடும் சிறுதெய்வங்களும்,** தமிழ் ஐயா வெளியீட்டகம், திருவையாறு.
9. கணபதிப்பிள்ளை, க., (1956), **இலங்கை வாழ் தமிழர் வரலாறு,** சுதந்திரன் வெளியீட்டகம்
10. கணேசலிங்கம், ப., (2007), **இந்து பண்பாட்டியல்**, கல்வியியல் வெளியீட்டு நிலையம், யாழ்ப்பாணம்.
11. கிருஸ்ணபிள்ளை விசாகரூபன், (2009), **ஈழத்துதமிழ் நாவல்களில் நாட்டார் பண்பாட்டுக் கூறுகள் பயில் நிலையும் பயன்பாடும்,** மலர் பதிப்பகம், யாழ்ப்பாணம்
12. கிருஷ்ணராஜா, செ., (1999), **இலங்கை வரலாறு - பாகம் 1,** பிறைநிலா வெளியீடு
13. குணராசா,க., (1996), **ஈழத்தவர் வரலாறு,** பூபாலசிங்கம் பதிப்பகம்
14. குமாரசாமி, க. இ., (2005), **இலங்கையில் கற்புடைமாதர் வழிபாடு,** அரவிந்தவாசம்